பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 11 | சனிக்கிழமை | 28.10.2023 | அதிர்வு 88

## மின்சாரம் தாக்கி வயோதிபர் சாவு!

### முல்லைத்தீவில் சோகம்

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேசத்தில் உள்ள விநாயகபுரம் கிராமத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 69 வயதுடைய 06

# தமிழ்க் கூட்டமைப்பின் அனைத்து எம்.பிக்களும் பதவி துறக்க வேண்டும்

### ஆனந்தசங்கரி வலியுறுத்து



– எஸ்.நிதர்ஷன் –

“தமிழர்களின் வாக்குகளைக் கொள்ளையடித்து நாடாளுமன்றம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடனடியாகத் தமது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும். இதுவே காலத்தின் கட்டாயமும் தேவையுமாகும்.” 08

## தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம்

### நேற்று மீண்டும் ஆரம்பம்









- எஸ்.நிதர்ஷன் -

யாழ். தையிட்டியில் மக்களின் காணிகளைச் சுவீகரித்துச் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் மீண்டும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 09

## சம்பந்தன் பதவி விலகல் குறித்து உண்மையைக் கூறிய சுமந்திரன்

### யாழில் ரவிகரன் தெரிவிப்பு



- எஸ்.நிதர்ஷன் -

“நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து சம்பந்தன் ஐயா விலக வேண்டும் என்று சுமந்திரன் எம்.பி. சொல்லியுள்ளதை சம்பந்தன் ஐயா கூட தவறாக எடுக்கமாட்டார்.”

– இவ்வாறு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் 09

## சாம்பிராணித் தூபத்துக்கு பெற்றோல் ஊற்றியதால் ஆடையகத்தில் தீ பரவல்!





கொழும்பு – புறக்கோட்டை 2ஆம் குறுக்குத்தெருவிலுள்ள ஆடையகத்தில் தீ பரவியமைக்கான காரணத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 02

## கிழக்கில் சட்ட ரீதியாகவே காணி விடுவிப்பு; இடையூறு ஏற்படுத்தினால் சட்ட நடவடிக்கை

### ஆளுநர் செந்தில் எச்சரிக்கை



கிழக்கு மாகாணத்தின் காணி விடுப்பு பணிகள் மகாவலி அமைச்சின் கீழ் சட்டரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும், அந்தப் பணிகள் ஒருபோதும் இன, மத அடிப்படையில் முன்னெடுக்கப்படாது என்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உறுதியளித்தார். 06





நாளை நடக்கும், நாளை நடக்கும் என்று தள்ளிப்போன பிள்ளையார் கல்யாணத்துக்குக் கடைசியில் திகதி தீர்மானிக்கும் நிலைமை வந்துவிட்டது. நான் ‘பிள்ளையார் கல்யாணம்’ என்றதுமே, எதைக் குறிப்பிடுகிறேன் என்பதை எனது வாசகர்கள் பட்டென்று பிடித்துக் கொள்வார்கள். ஏனெனில் அவர்கள் கற்பூர புத்தி கொண்ட கெட்டிக்காரர்கள்

வாசகர்களே! நீங்கள் ஊகித்தமை 06

# வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதன் 33 வருட நிறைவில் நேற்றுக் கவனவீர்ப்பு!

## ஜும்ஆத் தொழுகையின் பின்னர் புத்தளத்தில்










விடுதலைப் புலிகளினால் வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு நேற்றுடன் 33 வருடங்களாகிவிட்டமையை நினைவுகூர்ந்தும், தமக்கான நஷ்ட ஈட்டை வழங்குமாறு கோரியும் புத்தளத்தில் முஸ்லிம்கள் நேற்றுக் கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

மக்கள் மறுமலர்ச்சி முன்னணிக் கட்சியின் தலைவரின் ஒழுங்கமைப்பில் புத்தளம் – கொழும்பு வீதியின் ரத்மல்யாய பகுதியில் ஜும்ஆத் தொழுகை முடிவடைந்த பின்னர் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளினால் வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு, 33 வருடங்களாகியும் காலங்காலமாக மாறி மாறி வருகின்ற அரசாங்கங்களினால் தமக்கு நன்மையான எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என தெரிவித்தும், தாம் இழந்தவைக்கான நஷ்ட ஈட்டை வழங்குமாறு கோரியும், வேறு சில கோரிக்கைகளை முன்வைத்தும் இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதன்போது தமது கோரிக்கைகளை வெளிப்படுத்தும் கோஷங்களை எழுப்பியவாறும் பதாதைகளை ஏந்தியவாறும் பலர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

# இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் ஒரு சதம் கைத்தொழில் துறைக்கு

## கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவிப்பு

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் ஒரு சதவீதத்தை கைத்தொழில் துறைக்காக ஒதுக்குவதே அரசாங்கத்தின் இலக்காகும் என கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கைத்தொழில் துறையினூடாக 2022ஆம் ஆண்டு 13.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஏற்றுமதி வருவாயாக ஈட்டுவதற்கு வாய்ப்பு கிடைத்தது என அமைச்சர் ரமேஷ் பத்திரன சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் கைத்தொழில் துறைக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தின் அளவு மிகவும் குறைவாகவே உள்ளதன் காரணமாக கைத்தொழில்துறை போதியளவு முன்னேற்றம் அடையவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பின்னணியில் களுத்துறை மாவட்டத்தின் மில்லெனிய, காலி மாவட்டத்தின் எல்பிடிய, கண்டி மாவட்டத்தின் பொத்தபிடிய ஆகிய கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பித்துள்ளோம் என கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன மேலும் தெரிவித்துள்ளார்.



### சாம்பிராணித் தூபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆடையகத்துக்குச் சாம்பிராணித் தூபம் காட்டுவதற்காகத் தேங்காய் சிரட்டைகளுக்குப் பெற்றோல் ஊற்றி அதனைப் பற்ற வைக்கும் போதே தீ பரவியுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆடையகத்தில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் 23 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

அவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவித்தன.

CENTRAL PARK
JA-ELA

CENTRAL PARK JA-ELA
15 ACRES LARGEST
GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA
OVER 40+ AMENITIES




COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS
& PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™
GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

Discover the Locations that Embraces
the Ultimate Luxurious Living

+94 777 546 546 +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk

# திருமண விருந்து சாப்பிட்ட யுவதி திடீரென்று சுகவீனமுற்று மரணம்

## புத்தளம் பகுதியில் சம்பவம்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளத்தில் தனது நண்பியின் திருமண நிகழ்வில் கலந்துகொண்ட இளம் யுவதியொருவர் திடீரென சுகயீன மடைந்த நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

ஆனமடுவ, தசநாயக்க புரத்தைச் சேர்ந்த அயோத்திய தேசானி (வயது 20) யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என புத்தளம் பொலிஸார் தெரிவித்த னர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

உயிரிழந்த மாணவி கடந்த வருடம் உயர்தரப் பரீட்சை எழுதியவர். புத்தளத் தில் உள்ள தனது நண்பியின் திருமண நிகழ்வில் கலந்துகொள்வதற்காக நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு புத்த ளத்திற்கு வருகை தந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருமண நிகழ்வில் முழுமையாக கலந்துகொண்ட யுவதி, திருமண விருந்தை சாப்பிட்டதன் பின்னர் தனது உடல்நிலை சரியில்லை எனவும் உடனடி யாக தான் வீட்டுக்குச் செல்ல வேண்டும் எனவும் நண்பியிடம் கூறிவிட்டு, அங்கி ருந்து ஓட்டோ ஒன்றில் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இவ்வாறு ஓட்டோவில் சென்று கொண்டிருக்கும் போதே அவர் திடீரென சுகயீனமடைந்தமையுடன், அவர் உடன டியாக புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

யுவதிக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், அவர் நேற்று அதிகாலை 2 மணியளவில் உயிரிழந் துள்ளார் என புத்தளம் பகுதிக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர் தீன் முஹம்மது ஹிஸாம் தெரிவித் தார்.



உயிரிழந்த யுவதியின் சடலம் மீதான பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணை போன்றவற்றின் பின்னர், சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், உயிரிழந்த மாணவியின் சில உடல் அவையங்கள் இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளன எனவும், அதன் பின்னரே மர ணத்திற்கான காரணத்தை தெரி விக்க முடியும் எனவும் புத்தளம் பகுதிக் கான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் மேலும் தெரிவித்தார்.

# குவைத்தில் விசா இல்லாமல் தங்கியிருந்த 26 இலங்கையர் திருப்பியனுப்பப்பட்டனர்

குவைத்தில் விசா இன்றி தங்கி யிருந்த 26 இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று காலை கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்துள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 24 பேர் பெண்களாவர்.

விமான நிலையத்தில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர், அவர்களை வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள னர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.




# விபத்துகளினால் ஒன்பது கோடி ரூபா இ.போ.சவுக்கு வருடம் தோறும் நட்டம்

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் விபத்துக்களில் சிக்குவதன் காரணமாக வருடாந் தம் சுமார் ஒன்பது கோடி ரூபா நட்டம் ஏற்படுவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

வருடாந்தம் இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான சுமார் 1500 பஸ்கள் பல்வேறு விபத்துக்களுக்கும் உள்ளா கின்றன என அதன் விபத்து விசாரணை முகாமையாளர் எரந்த பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர் - இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் விபத்துக்களில் சிக்குண்டு 60 முதல் 70 வரையிலானவர்கள் உயிரிழக்கின்றனர் என அண்மைய அறிக்கையில் பதிவாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், இவ்வாறு விபத்துக்குள்ளான பஸ்களை மீள இயக்குவதற்கு ஏற்ற கால அவகாசம் அதிகம் என்பதால், அதன் போது ஏற்படும் வருமானத்தை கணக்கில் கொண் டால் வருடாந்தம் பலகோடி ரூபா நஷ்டம் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான விபத்துக்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில், சாரதிகளுக்கு பாதுகாப்பான சாரதி நுட்பங்களுடன் கூடிய பயிற்சி வகுப்பு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என இலங்கைப் போக்குவரத்து சபையின் விபத்து விசாரணை முகாமையாளர் எரந்த பெரேரா தெரிவித்தார்.



இதுவரையில் 300 சாரதிகளுக்குப் பயிற்சி அளிக் கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், மேல் மாகாணத்தில் வீதி விபத்துக்கள் சுமார் 25 வீதம் குறைந்துள்ளன என எரந்த பெரேரா மேலும் சுட்டிக்காட்டினார்.

# இலங்கையின் கடற்பரப்பில் தென் கொரிய போர்க்கப்பல்

இலங்கை கடற்பரப்பில் மற்றுமொரு சக்திவாய்ந்த போர்க்கப்பல் நங்கூரமிட்டுள்ளது.

தென் கொரிய குடியரசுக்கு சொந்தமான Gwanggaeto The Great எனும் கப்பலே நாட்டிற்கு வருகை தந்துள்ளது.

இந்த கப்பல் நேற்று முன்தினம் காலை இலங்கையை வந்தடைந்தது. கப்பலில் 249 பணியாளர்கள் உள்ளனர்.

135 மீட்டர் நீளமுள்ள புறயபெபயநவழ வுாந புசநயவ போர்க் கப்பலின் கட்டளை அதிகாரியாக கேப்டன் முஐை உலழரபெ ஊஜாரசட செயற்படுகின்றார்.

Gwanggaeto The Great நாட்டை விட்டுச் செல்வதற்கு முன்னர் கடற்படைக்கு சொந்தமான கப்பலுடன் இலங்கை கடற்பகுதியில் கடற்படைப் பயிற்சியில் ஈடுபடவும் திட்டமிடப்பட்டுள்ளது.



ஆறு வருடங்களின் பின்னர் தென் கொரிய கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை பணிப்பெண்கள் 65 பேர் பாதுகாப்பு மத்திய நிலையங்களில்!

பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள இலங்கையின் 65 வீட்டுப் பணிப் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பாதுகாப்பு மத்திய நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவின் ஜெட்டா மற்றும் ரியாத் நகரங்களிலுள்ள பாதுகாப்பு மத்திய நிலையங்களில் 34 பேர் தங்கியுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் 24 பேரும் ஓமானில் 07 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

இவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகளை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடகப்பேச்சாளர், பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

# காஷ்மீர் கறுப்பு தின நிகழ்வு நேற்று கொழும்பில் ஐ.நா. அலுவலகம் முன்




**(நூருல் ஹுதா உமர்)**

காஷ்மீர் கறுப்பு தினத்தின் முன்னிட்டு காஷ்மீர் மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் அமைதியான கவன ஈர்ப்புப் போராட்டமும், மகஜர் கையளிக்கும் நிகழ்வும் நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்திற்கு முன்பாக நடைபெற்றது.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சரிதான். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கான திகதி குறிப்பிடும் விடயம்தான் அது. வரும் ஐந்தாம் திகதி வவுனியாவில் தமிழரசின் மத்திய குழுக் கூட்டம் நடைபெறுகின்றது. அதன் நிகழ்ச்சி நிரலில் பிரதான விடயம் தேசிய மாநாட்டுக்குத் திகதி குறிப்பிடுவதுதான்.

இன்னும் சில காலம் மாநாட்டைத் தள்ளிப் போட வைப்பதன் மூலம் தொடர்ந்தும் தாமே தலைமையில் நீடிக்கலாம் என்று கணக்கிட்டு, கட்சியின் இளைஞரணி, மகளிர் அணி எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திய பின்னர்தான் தேசிய மாநாடு என்று மாவை சேனாதிராசா தடை போடாமல் விட்டால் இவ்வாண்டு முடிவதற்குள்ளேயே மாநாட்டை நடத்தி முடித்து விடலாம். கட்சியின் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்யவும் வாய்ப்புக் கிடைக்கும்.

சரி, இனி அடுத்த விடயத்துக்கு வருவோம்.

சம்பந்தனை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகுமாறு சுமந்திரன் கூறுகிறார் என்று வெளியான செய்தி குறித்து ஒரு சிறு விளக்கம்.

அவ்விடயத்தை விலாவாரியாக நான் விவரிக்க முற்பட்டால், ஏதோ சுமந்திரனை நான் தூக்கி வைக்கிறேன் என்று சில அன்பர்கள் முகநூல் யுத்தத்தைத் தொடங்கி விடுவார்.

அதனால் சுருக்கமாக ஓரிரு விடயங்களை மட்டும் தொட்டு எழுதுவதோடு விட்டுவிடுகிறேன்.

முதலில் – அந்த செய்தியை பிரதானமாக முந்திக் கொண்டு வெளியிட்டது எமது பத்திரிகை என்று குறிப்பிட்டு ஒரு முக்கிய சட்டத்தரணி கூட எங்கள் பத்திரிகையை சாடியிருந்தார். அது தவறு. அது காலையில் கொழும்பு தேசிய நாளிதழில் பிரசுரமான செய்தி. எமது மாலை இதழில்தான் அது பின்னர் வெளியானது.

அடுத்தது – அந்தச் செய்தியில், சுமந்திரனிடம் தொலைக்காட்சிப் பேட்டியில் கேட்கப்பட்ட கேள்வியும், அதற்கு சுமந்திரன் கூறிய பதிலும் விவரமாகப் பிரசுரமாகி இருந்தன. ஆனால் சில சட்ட மேதாவிகள் கூட, அந்தச் செய்தியை முழுமையாக வாசியாமல் அல்லது முழுமையாக வாசித்து அறிந்த பின்னர் தமது வசதிக்காக, சுமந்திரனிடம் கேட்கப்பட்ட கேள்வியில் இருந்த விடயங்களை எல்லாம் சுமந்திரனே கூறிய பதிலாக அர்த்தம் பண்ணி, அறிக்கைப் போர் நடத்தி இருப்பது சிறுபிள்ளைத்தனம்.

மூன்றாவது – மேற்படி செய்தி வெளியாவதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் சுமந்திரன் ஒரு வழக்கு விடயமாக திருகோணமலைக்குச் சென்றிருந்தார். அச்சமயம் வழமை போல தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள், ஆதரவாளர்களை அவர் சந்தித்து உரையாடி, உரையாற்றியும் இருந்தார். அவை பற்றிய படங்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

அடுத்த நாள், சம்பந்தன் விவகாரத்தை ஒட்டிய மேற்படி சுமந்திரனின் ஊடகப் பேட்டி பற்றிய செய்தி பத்திரிகையில் வெளியாகி இருந்தது.

திருகோணமலையில் உள்ளவர்களைச் சந்தித்து விட்டு வந்து, அவர்களின் விருப்பத்துக்கு இணங்க அடுத்த நாள் சுமந்திரன், மேற்படி சம்பந்தனைப் பதவி விலகக் கோரும் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார் என்று பல தரப்புக்களும் அர்த்தம் பண்ணிக் கொண்டிருக்கின்றன. அதுவும் தப்பு.

சுமந்திரன் கடந்த வாரம் திருகோணமலைக்குப் போவதற்கு முன்னரே – ஒரு வாரத்துக்குக் கூடிய காலம் முன்னதாகவே – அந்தத் தொலைக்காட்சிப் பேட்டி எடுக்கப்பட்டுவிட்டது. அதன் பின்னர்தான் சுமந்திரன் திருகோணமலைக்குச் சென்று ஆதரவாளர்கள், கட்சியினரைச் சந்தித்த நிகழ்வு இடம் பெற்றது. ஆகவே அந்த நிகழ்வில் திருகோணமலை மக்கள் அல்லது அப்பிரதேச பிரதிநிதிகள் சொன்ன கருத்தை உள்வாங்கி, அதன் அடிப்படையில்தான் சம்பந்தன் பதவி விலக வேண்டும் என்று சுமந்திரன் அறிவித்தார் எனக் கூறுவதும் பொருத்தமற்றது.

சம்பந்தன் ஐயா பதவி விலக வேண்டும் என்று சுமந்திரன் அளித்திருக்கும் பேட்டியின் விவரம் செய்தியாக வெளியாகி விட்டது. ஆனால் அது தொடர்பில் சம்பந்தனின் கருத்து யாது என்பது இன்னும் தெரிய வரவில்லை.

சுமந்திரனின் பேட்டி பற்றிய செய்தி வெளியான பின்னர் சம்பந்தன் – சுமந்திரன் சந்திப்பு இன்னமும் இடம்பெறவில்லை. இருவரும் தொலைபேசியில் கூட பேசவில்லை. வரும் செவ்வாய்க்கிழமை 31ஆம் திகதி இருவரும் சந்திக்க வேண்டிய ஒரு நிகழ்வு உள்ளது. அப்போது தனது கருத்தை சம்பந்தன் சுமந்திரனுக்கு தெரிவிப்பார் என எதிர்பார்க்க முடியும்.

சுமந்திரனின் பேட்டி பற்றிய விவரம் விலாவாரியாக கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவந்திருப்பதால் அவற்றை நிச்சயம் சம்பந்தன் வாசித்து இருப்பார்.

ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்ற குழு ஒன்று நாளை மறுதினம் இலங்கை வர இருக்கிறது. அக்குழு அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை சம்பந்தனின் இல்லத்தில் அவரையும் சுமந்திரனையும் சேர்ந்து சந்திப்பதாக ஏற்பாடு. அந்த சந்திப்புக்காக சுமந்திரன் சம்பந்தன் வீட்டுக்குச் செல்லும்போது சுமந்திரன் – சம்பந்தன் சந்திப்பு இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது சம்பந்தன் என்ன கூறுவார் என்பதை தகவல் கிடைத்தால் வாசகர்களோடு பகிர்ந்து கொள்வேன்.

## கிழக்கில் சட்ட ரீதியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்த முற்படும் மூன்றாம் தரப்பினருக்கு எதிராகப் பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போது இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“கிழக்கு மாகாணத்தின் மயிலத்தமடு – திவுலபத்தனபகுதியில் யுத்தத்திற்கு முன்பாக வசித்த மக்கள் யுத்தம் நிறைவடைந்த பின்னர் மீண்டும் அங்கு படிப்படியாக குடியமர ஆரம்பித்துள்ளனர். அம்மக்கள் விவசாயிகள் மற்றும் கால்நடை விவசாயிகள் என இரு குழுக்களாக இருப்பதால் அப்பகுதி மேய்ச்சல் நிலமாக மாறியுள்ளது.

மயிலத்தமடு பகுதியில் மீளக் குடியமரும்போது, பொலன்னறுவை மற்றும் அம்பாறை பகுதிகளைச் சேர்ந்த பலரை மேலதிகமாக அழைத்து வந்துள்ளமையினால், அவர்களின் விவசாயச் செயற்பாடுகளைப் பாதுகாக்கும் வகையில், வெளிமாவட்டங்களில் இருந்து வந்திருப்போருக்கு தற்காலிக ஊக்குவிப்பு தொகையொன்றை வழங்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும், அம்பாறை மற்றும் பொலன்னறுவை பகுதிகளிலிருந்து வந்தவர்களை அம்மாவட்டங்களிலேயே விரைவில் குடிமயர்த்துவது குறித்தும் ஆராயப்படுகிறது.

அதேபோல், மயிலத்தமடு – திவுலபத்தன பகுதியில் யுத்தத்திற்கு முன்னர் வசித்த மக்கள் அவர்களுக்குச் சொந்தமான காணிகளில் மீள் குடியமர்த்தப்பட வேண்டியது கட்டாயமானது என ஜனாதிபதி வலியுறுத்தியிருக்கும் நிலையில், மகாவலி அமைச்சு அப்பணியை சட்ட ரீதியாக முன்னெடுத்து வருகின்றது.

அதேநேரம் அனுமதியின்றி அரச காணிகளில் வசிப்பவர்களின் காணிகளைக் கையகப்படுத்தி, அவர்களை அக் காணிகளில் சட்டரீதியாக குடியமர்த்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும், அரச காணிகளில் அனுமதியின்றி வசிப்பவர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து தமது இருப்பை சட்டரீதியாக்கிக்கொள்ள முடியும் எனவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

அதேநேரம் மகாலவி வேலைத்திட்டத்திற்காக கிழக்கின் கோரளைப்பற்று பகுதியிலிருந்து தமிழர்களும், நாவலடி பகுதியிலிருந்து முஸ்லிம்களும் அகற்றப்பட்டிருந்த நிலையில் இந்த பணிகள் இன, மத அடிப்படையில் அல்லாது சட்டரீதியாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், கிராம சேவகர்களிடத்திலிருக்கும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டே காணிகளைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக சிங்கள மக்களின் குடியிருப்புகள் மற்றும் அங்கிருந்து அகற்றப்படுகின்றது என்ற வகையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் கருத்துக்களை வெளிப்படுத்தி வரும் தேரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அறிக்கைகளும் பொலிசாரினால் நீதிமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளன.

அதனால் மேற்படி முன்னெடுப்புகளின் போது சகல இனத்தவர்களுக்கும் இலங்கையர் என்ற வகையிலேயே சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதோடு, அது குறித்து அநாவசியமாக கருத்துக்களை வெளிப்படுத்த மூன்றாம் தரப்பினர் முற்படக் கூடாது.” – என்றும் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் கேட்டுக் கொண்டார்.

## மின்சாரம் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வயோதிபரே சாவடைந்துள்ளார்.

வீட்டுடன் காணப்படும் வயலுக்கு நீர் பாய்ச்சுவதற்காக நீர் பம்பிக்கு மின்சாரம் இணைப்பை வழங்கும்போதே அந்த வயோதிபர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் நட்டாங்கண்டல் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சீனாவுக்கு இடமளியோம்

இலங்கை - இந்திய உறவில், இடையில் பெரும் நெருடலாக இருப்பது சீனா.

புதுடில்லி - பிஜிங் இடையிலான போட்டியை வளமாக - வசமாக - பயன்படுத்துகின்றது கொழும்பு என்பது வெளிப்படை.

தனது தேவைகளை நிறைவு செய்யவும், உதவிகளை பெற்றுக் கொள்ளவும், தனது நாட்டை மேம்படுத்தவும் சீனா, இந்தியா ஆகிய இரண்டு தரப்புகளையும் ஒரே சமயத்தில் கொழும்பு கையாள்வது என்பது வேறு. அப்படியான ராஜதந்திர அணுகுமுறை எனின் அதில் நியாயமும் கூட இருக்கும்.

ஆனால், கொழும்பு இவ்விவகாரத்தை அதையெல்லாம் தாண்டி, கபடத்தனமாக - வஞ்சக முறையில் - கையாள்வதுதான் படுபோக்கிரித்தனம்.

இந்தியாவின் பாதுகாப்பு, பந்தோபஸ்து தொடர்பான விடயங்களைக் கேள்விக்குள்ளாக்கும் சீனத் திட்டங்களுக்கு மறைமுகமாக உதவுவதன் மூலம், சீனாவிடம் அதிக உதவிகளையும் ஊக்குவிப்பையும் பெற்றுக் கொள்ளும் கொழும்பு, அதே சமயம் இத்தகைய போக்கில் கொழும்பு செல்லாமல் இருப்பதற்காக அதைத் தாஜா செய்ய முற்படும் புதுடில்லியிடம் அதைக் காட்டி அதிகம் வாங்கி - வாரி - சுவீகரித்துக் கொள்ளவும் முனைகிறது. இந்தப் போக்கிரித்தனமான அணுகுமுறை குறித்து புதுடில்லி இன்னும் வெளிப்படையாகச் சீறாமல், அமுக்கி வாசிப்பதில் கூட, கொழும்புக்கான சீன ஆதரவின் வலுவான பின்புலப் பலம் ஒரு காரணமாக இருப்பதை மறுக்க முடியாது.

கொழும்பு - புதுடில்லி - பீஜிங் இடையிலான இழுபறி எப்படி இருந்துவிட்டும் போகட்டும். ஆனால் அதற்குள் வடக்கு - கிழக்கு தமிழர் தரப்பை, அவர்களது தாயகத்தை, இழுத்து விடும் சீனாவின் போக்கை தமிழர்கள் அனுமதித்துப் பார்த்திருக்கக் கூடாது.

வடக்குத் தமிழர்களின் மீனவ சமூகத்தினருக்கு தமிழக மீனவர்களுடன் சர்ச்சை. இந்திய மீனவரின் ஆக்கிரமிப்புக்கு எதிராக வடக்கு மீனவர்கள் சீற்றம் கொண்டுள்ளனர். இந்தப் பிரச்சினை நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இழுபடுகின்றது. இதுதான் சந்தர்ப்பம் என்று இடையில் நுழைய முயல்கிறது சீனா - 'ஆடு நனைகிறது என்று ஓநாய் கவலைப்பட்ட கதை' போன்று.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்குத் தமிழர். வடக்கு மீனவர் சமூகம் அவரது வாக்கு வங்கி. அதைத் தக்க வைப்பது அவரது அரசியல் கட்டாயம்.

அந்த மீனவர்களுக்கு - மீன்பிடித் துறைக்கு - உதவி என்ற பெயரில் 150 கோடி ரூபா வழங்க சீனா முற்படுகின்றது. அதைப் பெற்று தன் மக்களையும் வாக்கு வங்கியையும் தக்க வைக்கும் திட்டங்களை முன்னெடுப்பது அமைச்சர் டக்ளஸூக்கு அரசியல் நிர்ப்பந்தம் என்பதும் மறுக்க முடியாதது.

எது, எப்படியாயினும், புதுடில்லியுடன் தான் முண்டுவதற்கு வடக்குத் தமிழர் விவகாரத்தை சீனா வசமாக பயன்படுத்தத் தமிழர்கள் இடம் அளிக்கக் கூடாது. அப்படி இடமளிப்பது, நம் தொப்புள் கொடி உறவுகளுக்கு - வாழ்வியல் முறைகளால் நம்மை விட்டுப் பிரிக்க முடியாத நமது நெருங்கிய அயலவர்களுக்கு - நாம் செய்யும் பெரும் துரோகமாகி விடும்.

## சுற்றுலாத்துறையின் வருமானம் 3ஆம் காலாண்டில் அதிகரிப்பு

இந்த வருடத்தின் மூன்றாவது காலாண்டில் சுற்றுலாத்துறை வருமானம் 1.45 பில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது என இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 1.1 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் அதிகளவான சுற்றுலாப் பயணிகள், இவ்வாண்டே நாட்டிற்கு வருகை தருகின்றனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## கல்லூண்டாய் விபத்தில் காயமுற்றவர் உயிரிழப்பு

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லூண்டாய் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் காயமடைந்த ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் கார் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் கீரிமலை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஜோசப் சுதர்சன் என்பவர் ஆவார்.

இந்த விபத்து தொடர்பாக தெரியவருவதாவது:-

கல்லூண்டாய் பகுதியில் வியாழன் இரவு சைக்கிள், மோட்டார் சைக்கிள் மற்றும் கார் என்பன ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

சைக்கிளில் சென்ற நபர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, அராலி தெற்கு பகுதியைச் சேர்ந்த காரின் சாரதி நேற்றைய தினம் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## யாழ். போதனாவில் குருதித் தட்டுப்பாடு

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியில் அனைத்து வகையான குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

விபத்துக்கள், சத்திர சிகிச்சைகள், குருதிச்சோகை நோயாளர்கள், புற்றுநோயாளர்கள் மற்றும் குருதி தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வைத்தியசாலையில் அதிகரித்துச் செல்கின்றமையால் இரத்த வங்கியால் விநியோகிக்கப்படுகின்ற குருதியின் அளவும் கூடிக் கொண்டே செல்கின்றது என்று இரத்த வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

இந்த அதிகரிப்புக்கு ஏற்ப குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்றும், இதனால் இரத்த வங்கியில் எல்லா வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இது தொடர்பில் இரத்த வங்கியினர் மேலும் குறிப்பிடுகையில்,

"நாம் பல இடங்களுக்குச் சென்று குருதியைச் சேகரித்தாலும் குறிப்பிட்ட சில காலங்களில் குருதியின் கையிருப்பு குறைந்தளவிலேயே காணப்படுகின்றது.

எமது இரத்த வங்கியில் 330 பைந்த் குருதி குறையாமல் இருக்க வேண்டும். ஆனால்,தற்போது இருக்கும் குருதியின் அளவு 238 பைந்த் ஆகும். இது ஆபத்தான நிலையாகும்.

இதனால் நோயாளர்களுக்குத் தேவையான குருதியை எம்மால் வழங்க முடியாமலுள்ளது.

ஒரு அனர்த்தம் நிகழுமாயின் அதனால் ஏற்படும் குருதியிழப்பை ஈடுசெய்வதற்கு எம்மால் முடியாமல் போகலாம்.

ஆகவே, இந்த நிலைமையைக் கவனத்தில் கொண்டு பொதுமக்கள் இரத்ததானம் செய்வதற்கு முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்." - என்றனர்.

# மருத்துவப்பீட மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு

## நீர்த்தாரைப் பிரயோகமும் இடம்பெற்றது

கொழும்பில் போராட்டத்தில் ஈடுபட்ட மருத்துவப்பீட மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன.

கொழும்பு தாமரை தடாகம் அருகே போராட்டத்தில் ஈடுபட்ட மருத்துவப்பீட மாணவர்களைக் கலைப்பதற்காக அவர்கள் மீது பொலிஸாரால் கண்ணீர் புகைக் குண்டு வீச்சு மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்களான லைசியம் வளாகம், ஜேஏஆ பசுமைப் பல்கலைக்கழகம் போன்றவற்றுடன் சதி செய்து நாட்டின் இலவசக் கல்வியை அழிக்க அரசாங்கம் முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டியே மருத்துவப்பீட மாணவர்களின் நடவடிக்கைக் குழு நேற்றுப் பிற்பகல் கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் வீதிகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டது.



அத்துடன், மொரட்டுவை, வயம்ப மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு வழங்க வேண்டுமெனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் வலியுறுத்தினர்.

மாணவர்கள் தாமரை தடாகத்துக்கு அருகில் பொலிஸாரால் ஏற்படுத்தப்பட்ட தடுப்பு அணைகளை மீறி முன்னோக்கி செல்ல முற்பட்ட போதே பொலிஸாரால் கண்ணீர் புகைக் குண்டு வீச்சு மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

# ஈழத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா இரட்டை வேடம்!

## சாடுகின்றார் ரவிகரன்

–எஸ்.நிதர்ஷன்–

ஈழத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா சீராக நடக்கவில்லை. இரட்டை வேடப் போக்குடன் செயற்பட்டு அது தனக்கு தானே பொறி வைத்துக் கொள்கிறது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று அவர் நடாத்திய ஊடக சந்திப்பின் போது சீனக் கப்பல் வருகை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ் மக்களின் விடயத்தில் இந்தியா சீராக நடந்திருந்தால் தமிழர்களுக்கு எப்போதே விடிவு கிடைத்திருக்கும். ஆனால் இந்தியாவின் இரட்டை வேடப் போக்கு அதற்கு இடமளிக்காது.

யுத்த காலத்திலும் சரி, யுத்தத்திற்கு பின்னரான தற்போதைய சூழலிலும் கூட தமிழர்கள் விடயத்தில் இரட்டை வட போக்குடனேயே இந்தியா செயற்பட்டு வருகிறது.

தமிழ் மக்களுக்காக அல்லாமல் தமிழ் மக்களுக்கு எதிரானவர்களுடன் சேர்ந்து செயற்படுகின்ற இந்திய அரசின் அணுகுமுறையில் தவறு உள்ளது. இந்தியாவின் இத்தகைய பிழைகளினாலேயே இங்கே சீனா வருகிறது.

இந்தியாவின் இத்தகைய செயற்பாடு



களினாலே சீனாவின் ஆதிக்கம் மேலோங்குகிறது. இவ்வாறு சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து இந்தியாவின் இறைமைக்கும் பாதிப்பு ஏற்படுவதற்குக் காரணமே இந்தியா தான்.

எம்மைப் பொறுத்தவரையில் இந்தியா எங்களுக்காக நேரடியாக செயற்படும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. ஆக மொத்தத்தில் இராஜதந்திர ரீதியாகவும் இந்தியா தனக்கு தானே பொறி வைத்து கொள்கிறது. என்றார்.

## தமிழ்க் கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்ய வேண்டும் என்று சுமந்திரன் எம்.பி. கேட்டுள்ளார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதையடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையைச் சேர்ந்த சட்டத்தரணி வி.தவராசா, இரா.சம்பந்தனுக்கு எழுதிய கடிதத்தில், “சம்பந்தன் வளர்த்த கடா மார்பில் பாய்ந்து விட்டது” என்று சுமந்திரன் மீது குற்றஞ்சாட்டியிருந்தார்.

இது தொடர்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அமரர்களான தந்தை செல்வா, அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோரால் தமிழர்களுக்காக உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சிதைத்து 2004ஆம் ஆண்டு கூட்டணியில் வளர்க்கப்பட்ட சம்பந்தன் வளர்த்த கடாவாக மட்டுமல்ல ஓநாயாகவும் மாறி வரலாற்றுத் துரோகம் செய்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குச் செய்த துரோகம் தற்போது சம்பந்தனுக்குத் திரும்பி விட்டது.

ஆகையால் சம்பந்தன் மட்டுமல்ல 2004ஆம் ஆண்டு துரோகத்தனத்தால் தமிழர்களின் வாக்குகளைக் கொள்ளையடித்து நாடாளுமன்றம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடனடியாகத் தமது பதவிகளை இராஜிநாமா செய்யவேண்டும். இதுவே காலத்தின் கட்டாயமும் தேவையுமாகும்.

அதுமட்டுமல்ல அழிந்துபோன தமிழர்களின் ஜனநாயக மரபைக் கட்டிக்காப்பதற்கும் தமிழ் மக்களின் உண்மையான அபிலாஷைகளை மீண்டும் நம்பிக்கையோடு கட்டியெழுப்பவதற்கும் இவர்கள் அனைவரும் இராஜிநாமா செய்ய வேண்டும்.” – என்றார்.

# பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக கல்முனையில் துஆ பிராத்தனை









பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக கல்முனை வாழ் மக்களின் போராட்டம் மற்றும் துஆ பிராத்தனை ஆகியன நேற்று கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசலின் அருகில் இடம் பெற்றது.

பலஸ்தீன் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான யுத்தம் தொடர்ந்து பல நாள்களாக இடம் பெற்று வருகின்ற நிலையில் யுத்தத்தினால் இதுவரையில் பல ஆயிரக்கணக்கான குழந்தைகள், பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் .

பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக கல்முனையில் ஒன்று கூடிய பொது மக்கள் கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசல் அருகில் பல்வேறு சுலோகங்களை ஏந்தி துஆ பிராத்தனை யில் ஈடுபட்டு அமைதியான முறையில் கலைந்து சென்றனர்.

அத்துடன் கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசலில் இலங்கை மற்றும் பலஸ்தீன் கொடிகளை பொதுமக்கள் பறக்கவிட்டுள்ளனர்.

## தையிட்டி விகாரைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தச் சட்டவிரோத விகாரைக்கு எதிராகக் காணியின் உரிமையாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் மற்றும் தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தன.

இந்நிலையில், விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் மாதாந்தம் தொடர்ச்சியாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் தையிட்டி விகாரையில் போயா தினமான இன்று வழிபாடுகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் நேற்றிலிருந்து போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

## சம்பந்தன் பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஊடக சந்திப்பை ரவிகரன் நேற்று நடத்தியிருந்தார். இதன்போது சம்பந்தனின் எம்.பி. பதவி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சம்பந்தன் ஐயாவின் அரசியல் அனுபவம் தொடர்பில் அனைவருக்குமே தெரியும். அவர் ஒரு தெளிவான அரசியல்வாதி என்பதுடன் நீண்ட அனுபவசாலி என்றே பலரும் கூறுவார்கள்.

அவரது தெளிவான பார்வையும் அரசியல் அனுபவமும் எப்போதும் தேவையானது. ஆனால், வயது மூப்பின் காரணமாக அவரால் முன்னரைப் போன்று செயற்பட முடியவில்லை.

குறிப்பாக அவர் பிரதிநிதித்துவம் செய்கின்ற திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு சம்பவங்கள் நடைபெறுகின்றபோது அந்த மக்கள் தங்கள் பிரதிநிதி தொடர்பில் தேடுகின்றதுடன் தங்களுக்காக ஒருவர் களத்தில் இருக்க வேண்டும் என்று கோரியிருக்கின்ற நிலைமை உள்ளது.

இவ்வாறான நிலைமையில்தான் எமது கட்சியைச் சேர்ந்த சுமந்திரன் எம்.பி. கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியொன்றை வழங்கியிருந்தார்.

அதன்போது சம்பந்தன் ஐயா தொடர்பில் அவரிடத்தே கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் எம்.பி. பதவியிலிருந்து சம்பந்தன் விலக வேண்டுமென்ற விடயத்தைச் சொல்லியிருந்தார். அதாவது சம்பந்தன் ஐயா அனுபவசாலி என்றாலும் அவர் பிரதிநிதித்துவம் செய்கின்ற மக்களது எதிர்பார்ப்பை சுமந்திரன் பதிலாகக் கூறியுள்ளார்.

சுமந்திரன் சொன்னது உண்மையானதுதான். ஆனால், சுமந்திரன் நினைத்திருந்தால் பொய் சொல்லியிருக்கலாம். உண்மையைச் சொல்ல வேண்டும் என்பதற்காகவே அவர் இதனைக் கூறினார்.

அதேநேரத்தில் சுமந்திரன் எம்.பி. இந்த உண்மையைச் சொல்லாமல் விட்டிருந்தால் மீளவும் சுமந்திரன் எம்.பியைப் போட்டுத் தாக்கியிருப்பீர்கள்.

ஆகவே, சுமந்திரனின் உண்மையான இந்தக் கருத்து தொடர்பில் கட்சியின் அடுத்து வரும் கூட்டங்களில் கூட ஆராயப்படலாம். ஆனால், சுமந்திரனின் இந்தக் கருத்தைச் சம்பந்தன் ஐயா கூட தவறாக எடுக்க மாட்டார் என்றே நினைக்கின்றேன்.” – என்றார்.

# ஆசிரியர்களுடைய உரிமைக் குரலை அரசு அடக்க முற்பட்டால் போராட்டம் தொடரும்

## இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் சூளுரை

(பழுவூரான்)

"பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து ஆசிரியர்கள் இன்று (வெள்ளிக் கிழமை)?தங்களுடைய உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்திருக்கிறார்கள். தொடர்ச்சியாக ஆசிரியர்களுடைய உரிமைக் குரல் அடக்கப்படுமாக இருந்தால் நாங்கள் இந்தப் போராட்டத்தினை முன் கொண்டு சென்று, முன்னைய முறை போன்று இறுதிவரை போராடி வெற்றி வரை அதை முன்னெடுப்போம்."

– இவ்வாறு இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் ஜீவராசா ருபேசன் தெரிவித்தார்.

தற்போதைய ஆசிரியர் போராட்டம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த ஊடகச் சந்திப்பு மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

கடந்த 24 ஆம் திகதி கல்வியமைச்சின் இசுருபாயவுக்கு முன்பாக ஓர் உரிமைப் போராட்டத்தை ஆசிரியர்கள் முன்னெடுத்திருந்தார்கள். தங்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளை தங்களுக்குள்ள சுதந்திரமான முறையிலே முன் வைப்பதற்காக சென்ற ஆசிரியர்கள் மீது ரப்பர் குண்டுகளைப் பாவித்தும், நீர் தாரைப் பிரயோகம் செய்தும், கண்ணீர்ப்புகைக் குண்டுப் பிரயோகம் மேற்கொண்டும் மிலேச்சத்தனமாக அவர்களை அடக்குகின்ற செயற்பாடுகளை ரணில் – ராஜபக்ஷ அரசாங்கம் மேற்கொண்டது.

இதன்போது பாதிபடைந்த பல ஆசிரியர்கள் வைத்தியசாலையிலே அனுமதிக்கப்பட்ட சம்பவங்களும் அன்று இடம்பெற்றிருக்கின்றன.

கடந்த 25 வருட காலமாக சம்பள நிலுவைப் பிரச்சினையில் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அரச ஊழியர்களின் ஓய்வுக்கான வயது மாற்றத்தின் அடிப்படையில் சடுதியாகப் பல ஆசிரியர்கள் குறிப்பிட்ட காலத்திலே ஓய்வுக்குச் சென்றிருந்தார்கள். இதனால் பாடசாலைகளில் பல ஆசிரியர்களுக்கான தேவைப்பாடுகள் உள்ளன. முக்கியமான பல பாடங்களுக்கான ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுகின்றது. அந்த இடங்களுக்கு உடனடியாக ஆசிரியர் நியமனங்களை வழங்கும்படி கோரிக்கையை முன் வைத்திருந்தார்கள்.




கல்வி அமைச்சினாலே பரீட்சைகளை நடத்தப் போகின்றோம், ஆசிரியர்களை நியமிக்க போகின்றோம் என்று ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக ஒரே கதையைக் கூறி ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இன்று வரைக்கும் அந்த ஆசிரியர்களை நியமிப்பதற்கான எந்த ஒரு செயற்பாடும் முன்னெடுக்கப் படவுமில்லை. ஆசிரியர்கள் நியமிக்கப் படவுமில்லை.

தொடர்ச்சியாக இவர்கள் கல்விப் புலத்தை ஏமாற்றுகின்ற செயல்பாடுகளையே செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அண்மையில் நடந்த தரம் ஐந்து புலமைபரிசில் பரீட்சையில், பகுதி ஒன்று பரீட்சை வினாத்தாள் அந்த மாணவர்களுடைய வயது எல்லைக்கு அப்பால் சென்று, அவர்களை அழுத் தங்களுக்கு உட்படுத்தும் விதத்தில் மிகவும் கடினமான முறையிலே தயாரிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான சந்தர்ப்பங்களை வைத்துப் பார்க்கும் போது கல்வியை இவர்கள் தனியார் மயப்படுத்தும் ஒரு சூழ்நிலைக்கு இட்டு செல்வதற்கான ஒரு சந்தேகமே எங்களுக்கு வருகின்றது.

உரிமைக்காக குரல் கொடுக்கின்ற ஆசிரியர்கள் தாக்கப்படுகிறார்கள். அதே போன்று புலமைப் பரிசில் பரீட்சையிலே இவ்வாறான செயற்பாடுகளை செய்கின்றார்கள். ஆசிரியர்களின் நியமனத்தை இழுத்தடிப்பு செய்கின்றார்கள்.

இவற்றினைப் பார்க்கும்போது ரணில் – ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் சுய லாபத்துக்காக சேர்ந்து கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஒன்றிணைந்து, இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டு கல்வியை எங்கோ இழுத்துச் செல்கின்றார்கள் என்ற பெரும் சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகின்றது.

இவர்கள் இவ்வாறான செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக செய்வார்களேயானால் கடந்த 2021 ஆம் ஆண்டு நடந்ததை போன்று பாரிய போராட்டத்தை மேற்கொண்டு நாங்கள் எங்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்காக தொடர்ச்சியாக அதனை முன்னெடுத்துச் செல்வோம்.

அதற்கு முதல் முயற்சியாக இன்று வெள்ளிக்கிழமை பிற்பகலில் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஒவ்வொரு பாடசாலைக்கு முன்பாகவும் செய்திருக்கின்றோம். இந்தப் போராட்டம் ஆரம்பமே. தொடர்ச்சியாக ஆசிரியர்களுடைய உரிமைக் குரல் அடக்கப்படுமாக இருந்தால் நாங்கள் இந்தப் போராட்டத்தினை முன் கொண்டு சென்று, முன்னைய முறை போன்று இறுதி வரை போராடி வெற்றி வரை அதை முன்னெடுப்போம். – என்றார்.

# மஸ்கெலியா சாமிமலையில் 3 மாணவர்களைக் காணோம்

(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட சாமிமலை பகுதியில் உள்ள மூன்று தோட்டத்தில் உள்ள மூன்று மாணவர்கள் நேற்று முன்தினம் பகல் முதல் காணவில்லை என மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

காணாமல் போன மூன்று பேரும் 15 வயது உடைய சிறுவர்கள். சாமிமலை 200 ஏக்கர் தோட்டத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் மனோஜ் (15 வயது), சாமிமலை கொழும்பு தோட்டத்தை சேர்ந்த காளிமுத்து புலேந்திரன் (வயது 15), சாமி மலை ஸ்ரஸ்பி தோட்ட தெய்வகந்தை பிரிவைச் சேர்ந்த பி.துஷாந்தன் (வயது 15) ஆகிய மூவரும் நீராடச் சென்றபின் வீடு திரும்ப வில்லை எனப் பொலிஸ் நிலையத்தில் அவர்களின் பெற்றோர்கள் முறைப்பாடு பதிவு செய்து உள்ளனர்.

இவர்களை தேடும் பணியில் பெற்றோர்கள், உறவினர்கள் மேற் கொண்டு உள்ளனர்.




**உரலார் கேள்வி:- மேல்மருவத்தூர் ஆதிபரா சக்தி ஆலய மறைந்த பங்காரு அடிகளார் பற்றி உங்கள் எண்ணங்களைப் பதிவு செய்யுங்களேன்.**

**உலக்கையார் பதில் :-** 1982ஆம் ஆண்டு அவ் ஆலயத்திற்கு எனது குருநாதர் பேராசிரியர் இராதா கிருஷ்ணனுடன் முதன்முதலாகச் சென்றேன். அப்போது அந்த ஆலயம் வெறும் ஓலைக் கொட்டிலாகத்தான் இருந்தது. கூட்டம் சேரத் தொடங்கியிருந்த ஆரம்பகாலம் அது.

அப்போது மறைந்த பேரறிஞர் அ.ச.ஞான சம்பந்தன் அவர்கள், அடிகளாரிடம் ஈடுபாடு கொண்டு அங்கேயே வந்து தங்கியிருந்தார். நாங்கள் போன அன்று, பாரதத்தின் முன்னாள் நிதியமைச்சர் சி.சுப்ரமணியம் அவர்கள், அடிகளாரைத் தரிசிக்கவென அங்கு வந்திருந்தார். அவ்வாலயம் பற்றி நான் விசாரித்தபோது அங்குள்ளவர்கள் அடிகளாரூடாக அம்மன் பேசுவதாகச்



சொன்னார்கள்.

என் குருநாதரின் நிகழ்ச்சி முடிந்து அவரின் வீடுவந்து சேர்ந்ததும் அவரிடம், 'ஐயா! அடிகளாரிடம் ஒரு தெய்வத் தன்மையோ, தெய்வத் தோற்றமோ எதுவும் தெரியவில்லையே? அவரை வணங்க ஏன் இவ்வளவு கூட்டம்?'என்று கேட்டேன்.

அதற்கு அவர் 'அதெல்லாம் உனக்கெதுக்கடா? நீ விரும்பினால் கும்பிடு. இல்லாட்டி விட்டிடு. ஒண்ணேஒண்ணை மட்டும் நீ நெனச்சுப்பார். அ.ச.ஐயா, சி.சுப்ரமணியம் எல்லாரும் சாதாரண மானவங்களா என்ன? அவங்களே தேடிவராங்கன்னா அவரில ஏதோ இல்லாமலா இருக்கும்?' என்று சற்றுக் காட்டமாக எனக்குப் பதில் சொன்னார்.

அதற்குப் பிறகு ஆதிபராசக்தியும், அடிகளாரும் விறுவிறு என்று வேகமாய் வளர்ந்துவிட்டார்கள். அது ஒரு அசுரவளர்ச்சி என்றுதான் சொல்லவேண்டும். தமிழ்நாட்டின் அப்போதைய நிதியமைச்சராய் இருந்த இரா. நெடுஞ்செழியன் அவர்களின் துணைவியார், அடிகளார் மேல் பெரிய பற்றுவைத்து அவ்வாலய நிர்வாகத்தை விரிவாக்கப் பெருந்துணை செய்ததாய்க் கேள்விப் பட்டிருக்கிறேன். அதன்பின் அடிகளாரது பக்தர்கள் தமிழ்நாட்டைத்தாண்டி இந்தியா முழுதும் பரவி இன்று உலக நாடுகளிலெல்லாம் நிரம்பிக் கிடக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரை, மக்களின் மனதை ஆன்மீகம் நோக்கி எவரேனும் திருப்புகிறார்கள் என்றால், நிச்சயம் அதனால் நான் மகிழ்ச்சி அடைவேன்.

அடிகளார் பல ஆன்மீகப் புரட்சிகளை எல்லாம் செய்ததாய்ச் சொல்கிறார்கள். அவர் செய்ததாய்ச் சொல்லும் அந்தப் புரட்சிகளை எல்லாம் எப்போதோ நம் இந்துமதத்தில் பலர் செய்து முடித்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

ஆனாலும் இவ்வளவு தொகையான மக்களை ஆன்மீகத் திசைநோக்கி ஒன்றுதிரட்டுவதனால், நிச்சயம் ஆன்மபலம் இல்லாமல் அது சாத்திய மில்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதற்காக அடிகளார்மேல் என் மனதில் ஓரளவு மதிப்பு இருக்கத்தான் செய்கிறது.

அதேநேரத்தில் என் மனதின் வேறொரு மூலையில் மற்றொரு கருத்தும் பதிவாகி இருப்பதை நான் இங்கு சொல்லித்தான் ஆகவேண்டும்

பொருளை அருளாக்குவதுதான் ஓர் உண்மையான ஆன்மீகவாதியின் கடமை. அண்மைக்காலமாக அருளாளர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பலர், பொருளை அருளாக்குவதற்குப் பதிலாக, அருளைப் பொருளாக்க விழைகிறார்கள். அந்தப் பாதையில் அடிகளாரும் சென்றது என் மனதை நெருடத்தான் செய்கிறது.

'அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர்க்கேனும் பெறலரும்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்' என்றார் கம்பர். பெரிய செல்வம் வந்தால் உண்மைத் துறவிக்குக்கூட மனம் மாறிவிடும் என்பது இந்தக் கவிதை அடிக்கான சுருக்க விளக்கம்.

பிற்காலத்தில் அடிகளாரைச் சூழ்ந்துகொண்ட அரசியல்வாதிகளின் கூட்டம், இன்றுவரை 'கடவுள் இல்லை'என்று சொல்லிக் கொண்டிருப்போர் அவரது அணியில் சென்று நின்றவிதம், அபூர்வமாய் வாய்த்த இறையருளுக்குத் தன் குடும்பத்தில் வாரிசு நியமிக்கத் தலைப்பட்ட தவறான முறை, தன் பிள்ளைகளின் திருமணத்தை ஒரு கோடீஸ்வரரைப் போல் நிகழ்த்திக் காட்டிய கீழ்மை என அடிகளார் தொடர்பில் பிற்காலத்தில் நடந்த பல விடயங்களை என்னால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை.

**(12ஆம் பக்கம் பார்க்க)**

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரை, சமூகத்திற்கு முன்னுதாரணம் காட்டிய ஆன்மீகவாதி என்கிறார்கள். சமூகத்திற்கு முன் உதாரணம் காட்டினாரோ என்னவோ? நிச்சயமாக அவர் பற்றுநீங்கிச் செயற்பட வேண்டியதான ஆன்மீகத்திற்கு எந்தவித முன்னுதாரணமும் காட்டவில்லை என்பதே உண்மை.

நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் எனும் நான்கு விடயங்களே ஞானத்தின் அடிப்படை என்கிறார் வள்ளுவர். அடிகளாரிடம் மேற்சொன்ன ஒன்றையும் என்னால் காண முடியவில்லை. ஆனால் அவரால் சமூகத்தில் சில நல்ல காரியங்கள் நடந்ததையும் மறுப்பதற்கில்லை. அந்த நல்லகாரியங்கள் அவருக்குப் பின்னாலும் தொடருமா? என்பதுதான் இப்போதிருக்கும் பெரிய கேள்வி.

எது எப்படியோ? அடிகளார் இருக்கும்வரை மேல்மருவத்தூரில் குவிந்த செல்வத்தால், பல அறக் காரியங்கள் நிகழ்ந்தமை உண்மை. இனி அவரின் மறைவுக்குப் பின்னால் அவர் தேடிவைத்திருக்கும் அபரிமிதமான செல்வமே, அவ்வாலய நிர்வாகத்தின் நிம்மதியைக் கெடுத்துவிடுமோ என எண்ணத் தோன்றுகிறது.

வருங்காலத்தில் அவ்வாலயத்தின் உயர்வு, தாழ்வைப் பொறுத்துத்தான் அடிகளாரின் ஆன்மீகத் தூய்மை நிரூபணமாகும் என்று நினைக்கிறேன்.

**சல்லடையாரின் சலிப்பு :- இதைத்தான் விளக்கெண்ணையில வெண்டைக்காய் பொரிச்ச கதை என்கிறது. வாரிதியார், முடிவாக என்னதான் சொல்ல வருகிறாராக்கும்?**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி:- நம் தமிழ் அரசியல் தலைவர்கள் இப்போதெல்லாம் அடிக்கடி கடையடைப்பு, ஹர்த்தால் என்று தொடங்கி விடுகிறார்களே. அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** அவர்களுக்கென்ன? எந்தக் குறையும் இல்லாமல் வாழ்கிறார்கள். அரச சம்பளம், அரச இருப்பிடம், அரச வசதி, அரச வாகனம், அரச செல்வாக்கு என அனைத்தையும் பெற்றுக்கொண்டு சுகவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இடையிடையே நாடாளுமன்றத்தில் அரசை எதிர்த்துப் பேசித் தம்மைத் தியாகிகளாகக் காட்டி



மக்களை ஏமாற்றுவதோடு, அவர்களின் கடமை முடிந்து போகிறது.

ஊராரை நஷ்டப்படுத்திக் கடையடைப்பும், ஹர்த்தாலும் நடத்துவதில் என்ன தியாகம் இருக்கப் போகிறது?

ஏமாறுகிறவன் இருக்கும் வரையில் ஏமாற்றுபவன் இருந்துகொண்டேதான் இருப்பான். உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நம் தமிழர்களின் போக்கு மாறும்வரை, இவர்களை யாராலும் திருத்த முடியாது என்றே நினைக்கிறேன்.

**சல்லடையாரின் சலிப்பு :- 'ஊரான் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே' என்கிறது இதைத்தானுங்களோ...?**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி:- நம் தமிழ்த் தலைமைகளில் சரியான மாற்றம் வரவேண்டுமானால் அதற்கு என்ன செய்யவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** அதெல்லாம் இப்போதைக்கு நடக்கும் என்று தெரியவில்லை. ஆனாலும் நீங்கள் கேட்டதால் சில ஆலோசனைகளை மட்டும் சொல்கிறேன்.

- ஒவ்வொரு தொகுதியிலும் ஆகக் குறைந்தது மூவரைத் தேர்ந்தெடுத்து, மக்கள் கருத்துக் கணிப்பை நடாத்தி அதில் வெற்றி பெறுபவருக்கே தேர்தலில் 'சீற்' வழங்க வேண்டும்.
- தனிவாழ்வுத் தூய்மை, உண்மை இனப்பற்று, சிறந்த பேச்சாற்றல், நிர்வாகக் கட்டுப்பாடு, சோர்வின்மை, செயற்திறன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் தேர்தல் போட்டிக்குள் வர அவருக்கு அனுமதியளிக்க வேண்டும்.
- ஒவ்வோர் ஆண்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென அரசு ஒதுக்கும் பணத்தில், அவர்களின் தொகுதிகளுக்காக அவர்கள் செய்த வேலைத்திட்டங்களைப் பகிரங்கமாக வெளியிடச் செய்யவேண்டும்.
- அரசநிதிக்கு அப்பால் தம்முடைய சுயமுயற்சியால், தமது தொகுதிக்குஅவர்கள் செய்த நற்பணிகள் பற்றியும் ஆண்டுதோறும் அவர்கள் மக்களுக்குப் பகிரங்க அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.
- எவ்வளவுதான் நன்றாக அவர்கள் செயற்பட்டாலும் இரண்டு தேர்தல் காலத்துக்குப்பிறகு அவர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக் கூடாது.
- ஒவ்வொரு ஆண்டும் கட்சிப் பணிக்காக அவர்கள் செலவிட்ட நேரத்தையும், கட்சிக்குச் சேர்த்துக் கொடுத்த தொண்டர்களையும், நிதியையும் கணித்தே, கட்சி அவர்களுக்கு 'சீற்'வழங்க வேண்டும்.
- எந்த விடயத்திலேனும் கட்சிக் கட்டுப்பாட்டை ஓர் உறுப்பினர் மீறுவாரானால் உடனடியாகக் கட்சியிலிருந்து அவரை வெளியேற்ற வேண்டும்.

இப்படிச் சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தால், ஒருவேளை நல்ல, உண்மையான தலைவர்களைத் தேர்ந்தெடுக்கலாம் என நினைக்கிறேன்.

ஆனால் இதெல்லாம் இப்போதைக்கு நடக்குமென்று தோன்றவில்லை. இவற்றை நடைமுறைப்படுத்தவேண்டிய தலைமைத் தலைவர்களே நூலிழையில் பதவியில் தொங்கிக் கொண்டிருக்க ஆசைப்படுகிற பொழுது அவர்கள் எப்படி மற்றவர்களை நெறிப்படுத்த முடியும்?

நம் தலைவர்களும், தமிழ்நாட்டுத் தலைவர்களைப் போலத் தமக்குக் கிடைத்த நாடாளுமன்றப் பதவிகளைத் தமது குடும்பச் சொத்தாய்த்தான் நினைக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. அவர்களாவது மேற்சொன்ன கட்டுப்பாடுகளுக்கு உடன்படுவதாவது!

சும்மா கற்பனையிலாவது நல்லதை நினைக்கலாம் என்பதற்காகத்தான் உங்கள் கேள்விக்குப் பதில் சொல்ல முனைந்தேன். தமிழர்களின் விதி திருந்தாதவரை இதுவொன்றும் நடக்கப்போவதில்லை என்பது நிச்சயம்.

**சல்லடையாரின் சலிப்பு :- வாரிதியார், சொல்லுறது நெசந்தாங்கோ!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

(13ஆம் பக்கம் பார்க்க)

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

**உரலார் கேள்வி:- யாழில் நடந்த சந்தோஷ் நாராயணனின் இசைநிகழ்ச்சி பற்றிய செய்திகளைப் பார்த்தீர்களா?**

**உலக்கையார் பதில் :-** முப்பதாண்டுகள் திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் வாழ்ந்திருந்த யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு, இப்போதெல்லாம் இந்தியக் கலைஞர்களால் அடிக்கடி குதூகலக் கதவுகள் திறந்துவிடப்படுகின்றன.



திறந்துவிடப்படும் அக் கதவுகளுக்கூடாக மக்களுக்குக் குதூகலமும், அக் கலைஞர்களுக்கு வருமானமும் நல்லபடியாகக் கிடைக்குமாற்போல் தோன்றுகிறது.

நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி ஆடம்பரங்களின் அளவு கூடிக்கொண்டே போகிறது. ஒரு 'புலிப்' பாட்டைப் பாடுவதன் மூலம் நம் மக்களின் சுதந்திர தாகத்தை அவர்கள் தணித்துவிடுகிறார்களாம். நல்ல வேடிக்கை.

ஒருகாலத்தில், தமிழ் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றை வளர்ப்பதற்காக மிகச் சிரமப்பட்டு, நாங்கள் கம்பன் விழாக்களை நடாத்தியபோது, சிலர் நாங்கள் களியாட்டம் நடாத்திப் போராட்ட உணர்ச்சியை மழுங்கடிப்பதாகச் சொல்லி எங்களைக் கடுமையாக விமர்சித்தார்கள்.

ஆனால் தற்போது நடைபெற்றுவரும் இந்த உண்மைக் களியாட்ட நிகழ்ச்சிகளை எவரும் விமர்சிப்பதாய்த் தெரியவில்லை. ஒருவேளை போராட்டம் முடிந்து நம்மவர்களுக்குத் தனிநாடு கிடைத்துவிட்டதோ என்னவோ?

இப்போது நடக்கிற நிகழ்ச்சிகளையும், அந் நிகழ்ச்சிகளில் குவிந்து கொண்டாடும் மக்களையும் பார்த்தால், இவர்கள்தானா எங்களை விமர்சித்தார்கள்? என்று நினைத்துச் சிரிக்க வேண்டியிருக்கிறது.

இம்முறை நடந்த நிகழ்ச்சி இனாமாக நடத்தப்பட்டதாம். அந் நிகழ்ச்சியில் புலிகளுக்கு, பாடல் மூலம் அஞ்சலியும் செலுத்தப்பட்டதாம். காவற்படைகளும் இந் நிகழ்வுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கினார்களாம். இச் செய்திகளுக்குள் இருக்கும் முரண்பாடு சிந்திக்க வைக்கிறது.

எனக்கென்னவோ தமிழ் மக்கள் பிழையாக வழிநடாத்தப்படுகிறார்களோ? என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

**சல்லடையாரின் சலிப்பு :- கழகம் செய்தபோது வந்தது இரத்தம். இவர்கள் செய்யும் போது வருவது தக்காளிச் சட்னியா?**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



# டைனமெட் குச்சிகளுடன் மன்னாரில்ஒருவர் கைது!

(மன்னார் நிருபர்)

மன்னார் பிரதான தபாலக வீதியில் வைத்து 315 ஜெனட்னைட் (டைனமெட்) குச்சிகளுடன் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் இராணுவப் புலனாய்வு பிரிவின் தகவல்களுக்கு அமைய மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திர பாலவின் பணிப்புரைக்கு அமைவாக செயல்பட்ட மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் இந்த நபரைக் கைது செய்தமையோடு ஜெனட்னைட் (டைனமெட்) குச்சிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரிடம் மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணையின் பின் மீட்கப்பட்ட ஜெனட்னைட் (டைனமெட்) குச்சிகளுடன் அவர் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.






# இன்றைய ராசி பலன்கள் - 28.10.2023




உங்கள் மனதிலுள்ள எதிர்மறை எண்ணங்களை நீக்கி விடுங்கள். நீங்கள் உற்சாகமாகவும் நம்பிக்கையுடனும் இருந்தால் சாதகமான விளைவுகளைக் காணலாம்.

இறுக்கமான அதிகப் பணிகள் உங்களுக்கு கவலை அளிக்கும். சில ஆரோக்கியப் பிரச்சினை காரணமாக இன்று உங்கள் பணிகளை விரைந்து முடிக்க இயலாது.

உறவு நிலையில் குறிப்பாக உடன் பிறந்தோர்களுடனான உறவில் சில இடையூறுகள் காணப்படும். உறவில் மகிழ்ச்சி நிலவ உங்கள் உரையாடல்களில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பண வரவு குறைவாக இருக்கும். பணத்தை சாதுர்யமாக கையாள வேண்டும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் மனதில் மகிழ்ச்சி நிலவும். தொலை தூரத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

பணிதொடர்பானபயணம்காணப்படுகின்றது. உங்கள் பணிகளை முடிக்க திருப்தியான நேரம் உங்கள் கையில் உள்ளது.

தகவல் தொடர்பில் குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே அதில் கவனம் தேவை. உறவில் நல்லிணக்கம் பராமரிக்க இது மிகவும் அவசியம்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். என்றாலும் பணத்தை நீங்கள் பயனுள்ள வகையில் செலவு செய்ய இயலாது.

இன்று நீங்கள் தலைவலியால் பாதிக்கப்படலாம். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது சிறந்தது.




இன்று நற்பலன்கள் கிடைக்கும். நீங்கள் அமைதியாகவும் சௌகரியமாகவும் உணரலாம். நம்பிக்கை உணர்வுகள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும்.

உங்கள் பணிகளை நீங்கள் எளிதாக மேற்கொள்ளலாம். இதனால் நற்பெயர் சம்பாதிக்கலாம்.

வீட்டில் அமைதியும் நல்லிணக்கமும் காணப்படும். இன்று காதல் விவகாரங்கள் சிறந்த பலனை அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

உங்களின் மகிழ்ச்சியான மனநிலை காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்று உங்களிடம் கவனம் அதிகமாக காணப்படும்.அதனை நீங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு கொள்கையோடு செயல்படுவது உதவிகரமாக இருக்கும்.

பணியிடத்தில் மாற்றங்களுக்கான சாத்தியம் உள்ளது. நீங்கள் பயணம் மேற்கொள்வீர்கள். இதனால் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் பணிகளை திட்டமிட்டு முறையாக மேற்கொள்ள வேண்டும்.

உறவில் இணக்கம் குறைந்து காணப்படும். கருத்து வேறுபாடு காரணமாக பெரியவர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். தான தருமங்கள் செய்வதற்கு இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அதிகப் பணிகள் அமைதியின்மையும் தலைவலியையும் ஏற்படுத்தும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது. நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

இன்று பணிகள் சிறப்பானதாக காணப்படாது. உங்கள் மேலதிகாரிகளுடன் சில மோதல்கள் காணப்படும். பணியில் கவனக் குறைவு காணப்படும்.

உறவுமுறை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் துணையுடன் சகஜமான சூழ்நிலை ஏற்பட நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் அதிகமாக சேமிக்க இயலாது.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும்.




நீங்கள் நம்பிக்கையுடன் செயல்பட்டால் இன்று உங்கள் செயல்களில் வெற்றி கிடைக்கும். திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம்.

பணியிடச் சூழல் பொதுவாக சிறப்பாக இருக்கும். என்றாலும் நீங்கள் சில சவாலான சூழல்களை சந்திக்க நேரும். அதில் நீங்கள் மூழ்கியிருப்பீர்கள்.

இன்றைய நாள் சிறப்பாக அமைய குடும்பத்தில் நல்லிணக்கம் இருக்க வேண்டியது அவசியம். உறவில் மகிழ்ச்சி நிலவ சில விஷயங்களில் அனுசரித்து நடந்து கொள்வது சிறந்தது.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். என்றாலும் பணப் பரிவர்த்தனைகளை கவனமாகக் கையாளவும்.

சிறிது ஓய்வெடுப்பதன் மூலம் ஆரோக்கியம் சிறப்பாக பராமரிக்கலாம்.




உங்களின் அனுசரணையான அணுகுமுறை உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் உறவினர்கள் மற்றும் கூட்டாளிகளுடன் நல்லுறவு காணப்படும்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்கும். பல வாய்ப்புகள் காணப்படும். சக பணியாளர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

பெரியவர்களுடனான உறவு சிறப்பாக இருக்கும். அவர்களின் ஆதரவு உங்களுக்கு வழி காட்டும்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும்.அதிக பணம் சம்பாதிக்கும் அதிர்ஷ்டம் காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் துணையின் ஆரோக்கியத்திற்காக இன்று பணம் செலவு செய்ய நேரலாம்.




குடும்பத்தின் வளர்ச்சிக்கான செயல்களை தொடங்க உகந்த நாள். இன்று நீங்கள் நன்மையான பலன்கள் காண புத்திசாலித்தனத்துடன் செயல்பட வேண்டும்.

உங்கள் திறமைகளை சிறப்பாக பயன்படுத்தி நீங்கள் உங்கள் பணியில் வெற்றி பெறுவீர்கள். இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

பெரியவர்களுடனான உறவு சிறப்பாக இருக்கும். அவர்கள் ஆதரவாக இருப்பார்கள். இந்த வாய்ப்பை பயன்படுத்தி உறவை வலுப்படுத்திக் கொள்ளுங்கள்.

சில தடைகளை சந்தித்த பின் நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள சிறிய அளவில் கடன் வாங்க முயற்சி செய்யலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.10.2023




இன்று வளர்ச்சி காண்பதற்கு உங்கள் ஆற்றலை முழுவதுமாக பயன்படுத் துங்கள். உங்கள் தன்னம்பிக்கையை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் நல்லுறவு பராமரிப்பது நல்லது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது நீங்கள் பதட்டமாக காணப்படுவீர்கள். நேரத்தை நிர்வகிப்ப தன் மூலம் எல்லாப் பணிகளையும் குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

இன்று வீட்டில் சுமூகமான சூழ்நிலை காணப்படாது. தேவையற்ற வாக்குவாதங்கள் நேரலாம். இது உங்களு-க்கு கவலை ஏற்படுத்தும்.

பூர்வீகச் சொத்து மற்றும் பங்கு வர்த்தகம் மூலம் இன்று பண வரவு ஏற்பட வாய்புள்ளது. இதனால் நிதி நிலைமை மகிழ்சிகரமாக காணப்படும்.




உங்கள் புத்திசாலித் தனத்தை நீங்கள் நன்கு பயன்படுத்தினால் நீங்கள் அதிகம் சாதிக்கலாம். சுய முன்னேற்றத் திற்கான முயற்சி மேற்கொள்ளுங்கள்.

இன்று உங்கள் பணியில் ஜொலிப் பீர்கள். லாபகரமான பலன்கள் கிடைக் கும் சாத்தியம் உள்ளது. இதனால் உங்களிடம் திருப்தி காணப்படும்.

குடும்பத்தில் திருப்தி காணப்படும். நீங்கள் மகிழ்ந்து மற்றவர்களையும் உற்சாகப் படுத்துவீர்கள். உங்கள் இனிமையான போக்கின் காரணமாக அனைவரும் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக காணப்படும். நிதிநிலையில் ஸ்திரத்தன்மை பராமரிக்க உகந்த நேரம். ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் அளிக்கும்.

பொதுவாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




5 குடும்பத்தினரின் நலன் குறித்த எண்ணங்கள் உங்கள் மனதில் ஓடும். இதற்காக உங்கள் நேரத்தின் ஒரு பகுதியை இதற்கு ஒதுக்குவீர்கள்.

இன்று பதட்டம் நிறைந்து காணப்படும். இதனால் கவனமின்மை காணப்படும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

மற்றவர்களை அரவணைத்து செல்லும் அணுகுமுறை மூலம் உறவு வலுப்படும்.

இன்று நீங்கள் அதிக பணம் சம்பாதிக்க இயலும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சூடு சம்பந்த மான பிரச்சினைகள் உங்களுக்கு கவலை அளிக் கும்.




அதிக சிந்தனை உங்களுக்கு குழப்பத்தையே ஏற்படுத்தும். இந்தப் போக்கை தவிர்த்து அமைதியாக இருக்க முயலுங்கள்.

பணியில் பதட்டம் காணப்படும். பொறுமையும் நேர்மையும் வளர்ச்சியை உருவாக்கித் தரும்.

குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும். பொறுமையாக இருந்து அமைதியாக கையாள்வது அவசியம்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். நிதி நிலை யில் ஸ்திரத்தன்மை பராமரிப்பது கடினமாக உணர்வீர் கள்.

உங்கள் ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உங்கள் கண்களை பரிசோதித்துக் கொள்வது நல்லது.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
CENTRALPAR JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# இலங்கைக்கு கடந்த இருந்த 50 கிலோ கடல் அட்டை பறிமுதல்

## - 5 பேர் கைது

தனுஷ்கோடி கடல் பகுதியில் இலங்கைக்கு கடந்த இருந்த 50 கிலோ கிராம் கடல் அட்டைகளுடன் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் உள்ள இந்திய கடலோர காவல் படையினர் கப்பல் ஒன்றில் இராமேஸ்வரத்திற்கும் தனுஷ்கோடிக்கும் இடைப்பட்ட வடக்கு கடல் பகுதியில் நேற்று முன்தினம் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த கடல் பகுதியில் மீன்பிடித்து கொண்டிருந்த மண்டபத்தை சேர்ந்த விசைப்படகு ஒன்றை இந்திய கடலோர காவல் படையினர் சந்தேகத்தின் பேரில் நிறுத்தி சோதனை செய்தனர்.

அதில் தடை செய்யப்பட்ட 50 கிலோ கடல் அட்டைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து இந்திய கடலோர காவல் படையினர் அந்த கடல் அட்டைகளையும், விசைப்படகையும் பறிமுதல் செய்தனர்.



அத்துடன், கடல் அட்டைகளை பிடித்த குற்றச்சாட்டில் மண்டபத்தை சேர்ந்த ஆறுமுகம் (வயது 42), முருகேசன் (வயது 55), அருண்குமார் (வயது 33), சரவணன் (வயது 44) மற்றும் முனியாண்டி (வயது 51) ஆகிய 5 பேரையும் கைது செய்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டை மற்றும் கைது செய்யப்பட்ட ஐந்து பேரையும் மண்டபத்தில் உள்ள வனத்துறை அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து மண்டபம் வனச்சரக அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிடிக்கப்பட்ட கடல் அட்டைகள் கடற்கரைக்கு கொண்டு வந்து பதப்படுத்தப்பட்ட பின்னர் படகு மூலம் இலங்கைக்கு கடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகிறது.

# ஆளுநரை மாற்றிவிடாதீர்கள்: முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை



நான் மத்திய அரசை, மத்திய அரசின் பொறுப்பில் இருக்கக் கூடிய பிரதமரை, உள்துறை அமைச்சராக இருக்கக்கூடிய அமித் ஷாவை எல்லாம் கேட்டுக்கொள்ள விரும்புவது, தயவுசெய்து இங்கிருக்கும் தமிழக ஆளுநரை என்றைக்கும் மாற்றிவிடாதீர்கள். இந்த மக்களவைத் தேர்தல் வரைக்குமாவது அவர் இருக்கட்டும் என்று மத்திய அரசையும், பிரதமரையும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவையும் கேட்டுக்கொள்கிறேன் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் மத்திய அரசை, மத்திய அரசின் பொறுப்பில் இருக்கக்கூடிய பிரதமரை, உள்துறை அமைச்சராக இருக்கக்கூடிய அமித் ஷாவை எல்லாம் கேட்டுக்கொள்ள விரும்புவது, தயவுசெய்து இங்கிருக்கும் ஆளுநரை மட்டும் என்றைக்கும் மாற்றி விடாதீர்கள். இந்த மக்களவைத் தேர்தல் வரைக்குமாவது கொஞ்சம் இருக்கட்டும். எங்களுக்கு அதில் பல சவுரியங்கள் இருக்கிறது.

ஆளுநர் ஏதாவது பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால், மக்கள் யாரும் அதை பொருட்படுத்தவில்லை. மக்கள் அவரது பேச்சை அசட்டை செய்துவரும் சூழ்நிலையைத்தான் பார்க்கிறோம்.

இன்றைக்கு சமூக ஊடகங்களில் வந்துகொண்டிருக்கும் செய்திகளை எல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்தச் சூழலில்தான் தி.மு.க. ஆட்சி நடந்து வருகிறது. தேர்தல் நேரத்தில் மக்களிடத்தில் என்னென்ன வாக்குறுதிகளை கொடுத்தோமோ, அதையெல்லாம் நிறைவேற்றி வருகிறோம்.

இன்றைக்குக் கருத்துக்கணிப்பு வரக்கூடிய சூழ்நிலை எல்லாம் பார்க்கிறபோது, எப்படி தமிழ்நாட்டில் ஒரு மிகப்பெரிய வெற்றியைக் கடந்த சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றோமோ, அதேபோல் வட மாநிலத்தில் நடைபெற இருக்கக்கூடிய 5 மாநிலத்தின் சட்டமன்றத் தேர்தலில் நிச்சயமாக, உறுதியாக இண்டியா கூட்டணி மிகப்பெரிய வெற்றியைப் பெறக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

மோடி தலைமையில் ஆண்டு கொண்டிருக்கக்கூடிய ஒன்றிய பா.ஜ.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. 2024 இல் நடைபெறவிருக்கக் கூடிய நாடாளுமன்ற தேர்தலுக்கு நீங்கள் எல்லாம் தயாராக இருக்கவேண்டும், தயாராக இருக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# ஹமாஸ் மீது அமெரிக்கா பொருளாதார தடை: இஸ்ரேல் தாக்குதலால் பரிதாப நிலையில் காசா!



ஹமாஸ் அமைப்பு, பாலஸ்தீனிய இஸ்லாமிய ஜிஹாத் குழு மற்றும் ஈரானின் புரட்சிகர படை மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

ஹமாஸ் மீது அமெரிக்கா விதிக்கும் இரண்டாவது சுற்று தடை இது. ஹமாஸ் முதலீடு செய்துள்ள சொத்துகளையும், ஹமாஸுடன் இணைந்த நிறுவனங்களையும் முடக்கும் விதமாக இந்த பொருளாதார தடைகள் விதிக்கப்படுகிறது என அமெரிக்கா அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள ஹமாஸ் மற்றும் பிற போராளிக் குழுக்களை ஈரான் ஆதரிக்கிறது என்பது அமெரிக்காவின் நீண்ட காலக் குற்றச்சாட்டாக உள்ளது.

அதன்படி, இந்தக் குழுக்களுக்கு ஈரான் நிதியுதவி அளிப்பதை தடுக்கும் நோக்கத்துடன் ஹமாஸ் மற்றும் ஈரானின் புரட்சிகர படை மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை அறிவித்துள்ளது.

இதனிடையே, காசா நகரின் புறநகர் பகுதியான ஷிஜாயாவில் உள்ள ஹமாஸ் இலக்குகளை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் விமான தாக்குதல் நடத்தியது. பீரங்கி குண்டுகளை வீசியும் தாக்கியுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

அத்துடன், காசாவில் தரைவழித் தாக்குதல் நடத்த ஒத்திகை பார்த்த நிலையில், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ்வில் உள்ள ஒரு கட்டடத்தில் ஏவுகணை ஒன்று தாக்கியதில் மூன்று பேர் வரை காயமடைந்துள்ளனர். இந்த ஏவுகணை தாக்குதலுக்கு ஹமாஸ் பொறுப்பேற்றுள்ளது. காசா மீதான தாக்குதலுக்கு பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என ஹமாஸ் தெரிவித்துள்ளது. அரைமணி நேரத்தில் பல ஏவுகணைகள் வீசப்பட்டன என்றும் தெரிவித்துள்ளது.

அதேநேரம், டெல் அவிவ் நோக்கி ஏவப்பட்ட எட்டு ஏவுகணைகளை இஸ்ரேல் இடைமறித்து அழித்தது என அந்த நாட்டின் ஊடகம் 12 செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, காசாவில் எரிபொருள் பற்றாக்குறையால் ஆயிரக்கணக்கான நோயாளிகள் ஆபத்தில் உள்ளனர் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. காசாவில் உள்ள 12 பெரிய மருத்துவமனைகள் இயங்குவதற்கு தினமும் குறைந்தது 94 ஆயிரம் லிட்டர் எரிபொருள் தேவைப்படுகிறது.

ஆனால், இங்கு எரிபொருள் மற்றும் மருத்துவப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் டயாலிசிஸ் தேவைப்படும் 1,000 நோயாளிகள், 2,000 புற்று நோயாளிகள், தீவிர சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் மற்றும் பச்சிளம் குழந்தைகள் ஆபத்தில் உள்ளனர்.

பாலஸ்தீனிய பிராந்தியத்துக்கான உலக சுகாதார நிறுவன பிரதிநிதி ரிச்சர்ட் பீபர்கார்ன் இதுகுறித்து கருத்து தெரிவிக்கையில்,

எரிபொருள் பற்றாக்குறையால் தாய் மற்றும் பிறந்த குழந்தைகளின் ஆரோக்கியம் மோசமடைந்து வருகிறது. உலக நாடுகள் காசாவுக்கு எரிபொருள், உணவு, தண்ணீர் மற்றும் மருத்துவப் பொருட்களை தொடர்ந்து வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதனிடையே, உணவு பற்றாக் குறையும் நிலவுவதால் காசா மக்கள் பசியால் வாடுகின்றனர் என உலக உணவுத் திட்டத்தின் செய்தித் தொடர்பாளர் அபீர் எடெஃபா வேதனை தெரிவித்துள்ளார்.

காசா அத்தியாவசிய பொருட்கள் பற்றாக்குறையால் போராடி வருகிறது. உணவும் தண்ணீரும் நிறைவடைந்து வருகின்றன.

குறிப்பாக காசாவுக்கு வெளியே, மேற்குக் கரையில் ஒவ்வொரு நாளும் நிலைமைகள் மோசமடைந்து வருகின்றன.

தூய்மைப் பணிகளும் துண்டிக்கப்பட்டுள்ளதால் கொலரா உள்ளிட்ட நோய் தொற்று பரவும் அபாயமும் காசாவில் நிலவி வருகிறது என அவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

# பெண்களுக்கு எதிராக நவாஸ் ஷெரீப் கருத்து: பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் சர்ச்சை

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், பெண்களுக்கு எதிராக பேசியது தவறு என அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டத்தில் பேசிய நவாஸ் ஷெரீப்,

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி சார்பில் கூட்டத்துக்கு வந்திருக்கும் பெண்களைப் பாருங்கள். மரியாதைக் குரிய அவர் கள், இந்த பொதுக் கூட்டத்தில் பங்கேற்று தலைவர் கள் பேசுவதை கவனிக்கிறார்கள். ஆனால், இம்ரான் கான் கட்சி நடத்தும் கூட்டங்களில் பங்கேற்கும் பெண்களோ இசைக்கு நடனமாடுகிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்பதையும், என்ன சொல்லவில்லை என்பதையும் நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என கூறி இருந்தார்.

அவரது கருத்து அரசியல் ரீதியில் கடும் கண்டனம் எழுந்தது.

இந்த விவகாரம் அந்த நாட்டின் நாடாளுமன்ற மேலவையிலும் எதிரொலித்துள்ளது. அவையில் பேசிய இம்ரான் கான் கட்சி எம்.பி. வாலித் இக்பால், பெண்களை எவ்வாறு மதிக்க வேண்டும் என்பதை நவாஸ் ஷெரீப் கற்றுக்கொள்ள வேண்டும். எம்.யூ.எம். கட்சியின் தலைவர் அல்தாப் ஹுசைனும் பெண்களுக்கு எதிராக பேசி பின்னர் மன்னிப்பு கோரி இருக்கிறார் எனக் குறிப்பிட்டார்.

அப்போது பேசிய மேலவை தலைவர் சாதிக் சஞ்சரானி, நவாஸ் ஷெரீப் பேசியதை அரசியலாக்க வேண்டாம் என கேட்டுக்கொண்டார்.

அதற்கு பதில் அளித்த வாலித் இக்பால், நான் அரசியலாக்கவில்லை. பாலியல் ரீதியாக பெண்களைத் தாக்குவது பாகிஸ்தான் அரசியலில் புதிதல்ல எனக் குறிப்பிட்டுள்ளார்.



# சாவகச்சேரிப் படுகொலைகளின் 36 ஆவது நினைவேந்தல் நேற்று

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அனுஷ்டிப்பு

**(த.சுபேசன்)**

சாவகச்சேரிப் படுகொலையின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை 5மணிக்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் சாவகச்சேரிப் பொதுச்சந்தை வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது 1987 ஒக்டோபர் 27 ஆம் திகதி சாவகச்சேரி சந்தைப் பகுதியை அண்மித்து இந்திய விமானப்படையின் தாக்குதலில் பலியான 68 பொதுமக்களுக்கும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் முன்னாள்உறுப்பினர்வீ.விஜயேந்திரன்தலைமையில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் உயிரிழந்த பொதுமக்களின் உறவுகள். பொதுமக்கள்,வியாபாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அன்றைய தினம் கந்தசஷ்டி விரத இறுதி நாளில் சூரன் தாங்கிய ஊர்தியை இலக்கு வைத்து இந்திய விமான படையின் இரண்டு ஹெலிகள் நடத்திய தாக்குதலில் 68பொதுமக்கள் உயிரிழந்தமையுடன், 175பேர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்




வவுனியாவில் அனைத்து பாடசாலைக்கு முன்பாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 24 ஆம் திகதி இசுறுபாயவிற்கு முன் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து முன்னெடுத்து ஆர்ப்பாட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்தே நேற்றையதினம் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது "குழந்தைகளின் கல்வி உரிமைக்காக போராடும் அதிபர்கள், ஆசிரியர்கள் மீதான அரசின் கொடுரத் தாக்குதலை எதிர்ப்போம்", "ரணில் – ராஜபக்ஷஅரசின்கேவலமானகுண்டர்தாக்குதலை கண்டிப்போம்", "சம்பளம், சம்பள நிலுவை மீது அறவிடும் வரியை உடன் நிறுத்து!" –போன்றபதாதைகளைஏந்தியவாறு ஆசிதியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். "சீராழிக்காதே, சீராழிக்காதே அடிப்படை ஜனநாயகத்தை சீராழிக்காதே!" போன்ற பல்வேறு கோசங்களையும் அச்சமயச்ம் அவர்கள் எழுப்பினர்.







# பாகிஸ்தானை வீழ்த்தி முதலிடத்தைப் பிடித்தது தென்னாபிரிக்க அணி

பாகிஸ்தானுடனான 'த்ரில்' ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்று, புள்ளிப்பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் – தென்னாபிரிக்க அணிகள் சென்னையில் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அதன்படி, அந்த அணி முதலில் களமிறங்கியது.

அணியின் தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய அப்துல்லா 9 ஓட்டங்களுடனும், இமாம் உல் ஹாக் 18 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். பின்னர் அணித்தலைவர் பாபருடன் முகமது ரிஸ்வான் ஜோடி சேர்ந்தார். சிறிது அதிரடி காட்டிய முகமது ரிஸ்வான், 31 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த இப்திகார் அகமது 21 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். தொடக்கம் முதலே நிதானமாக விளையாடிவந்த அணித்தலைவர் பாபர் அசாம் அரைச்சதம் அடித்த நிலையில், ஆட்டமிழந்தார்.

பின்னர் சவுத் சகீல் மற்றும் ஷதாப் கான் இருவரும் இணைந்து அணியை சரிவிலிருந்து மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அவ்வப்போது பௌண்டரிகளையும் விரட்டினர். இந்த ஜோடி 6ஆவது விக்கெட்டுக்காக 84 ஓட்டங்கள் சேர்த்தது. சவுத் சகீல் அரைச்சதம் அடித்து 52 ஓட்டங்களுடனும், ஷதாப் கான் 43 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 46.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 270 ஓட்டங்களைச் சேர்த்தது.

தென்னாபிரிக்க அணி சாபாக பந்து வீச்சில், ஷம்சி அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளையும், மார்கோ ஜோன்சன் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பின்னர் 271 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா களமிறங்கியது.

அணியின் தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய அணித்தலைவர் பவுமா 28 ஓட்டங்களுடனும், டி கொக் 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த வான் டர் டசன் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து கிளாசென் 12 ஓட்டங்களுடனும் டேவிட் மில்லர் 29 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

ஒருபுறம் விக்கெட்டுகள் விழுந்தாலும், அனுபவ வீரரான எய்டன் மார்க்ரம் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர முக்கிய பங்காற்றினார். சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மார்க்ரம் 91 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

கடைசியில் தென்னாபிரிக்க அணி வெற்றியிலக்கைக் கடந்தது.

இதன் மூலம் பரபரப்பான ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவின் ஷம்சி தெரிவானார்.

இந்த வெற்றியையடுத்து தென்னாபிரிக்கா, 10 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் அவுஸ்திரேலியா – நியூஸிலாந்து அணிகள் மோதவுள்ளன.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | தென்னாபிரிக்கா | 6 | 5 | 1 | 0 | 0 | 10 | 2.032 |
| 02 | இந்தியா | 5 | 5 | 0 | 0 | 0 | 10 | 1.353 |
| 03 | நியூஸிலாந்து | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | 1.481 |
| 04 | அவுஸ்திரேலியா | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | 1.142 |
| 05 | இலங்கை | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.205 |
| 06 | பாகிஸ்தான் | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -0.387 |
| 07 | ஆப்கானிஸ்தான் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.969 |
| 08 | பங்களாதேஷ் | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -1.253 |
| 09 | இங்கிலாந்து | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -1.634 |
| 10 | நெதர்லாந்து | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -1.922 |